சமூக ஆர்வலர் புகாரின் பேரில்

# நாய்களுக்கு கு.க.வில் குளறுபடி தனியார் அமைப்பு மீது வழக்கு

திருச்சி, அக்.2: திருச்சியில் நாய்களுக்கு சரிவர கு.க. செய்யாத மாநகராட்சி ஒப்பந்ததாரரரான பிராணிகள் வளர்ப்பு அமைப்பின் மீதும் அதில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

திருச்சி மாநகராட்சி சார்பில் நாய்களுக்கு குடும்பக் கட்டுபாடு செய்வதற்கு தஞ்சாவூரை சேர்ந்த யசோதை பிராணிகள் வளர்ப்பு அமைப்பினருக்கு, மாநகராட்சியினர் ஒப்பந்தம் விட்டுள்ளனர். அந்த தனியார் சேவை அமைப்பினர் திருச்சி பாலக்கரை கால்நடை மருத்துவமனையில் நாய்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்து வந்தனர். இவர்கள் கு.க. செய்யப்பட்ட ஒரு நாய்க்கு சரிவர தையல் போடாததால் குடல் சரிந்து கடந்த 28ம் தேதி நாய் இறந்தது.

இதுகுறித்து, திருச்சி காந்தி மார்க்கெட் போலீசாரிடம், திருச்சி கீழக்கல்கண்டார்கோட்டை அண்ணாநகரை சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவர் புகார் அளித்தார். புகாரின் பேரில், மாநகராட்சி ஒப்பந்தகாரர்களான யசோதை பிராணிகள் வளர்ப்பு அமைப்பு மீதும், அதன் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் மீதும் விலங்குகள் வதை தடுப்பு சட்டத்தின் கீழ் காந்தி மார்க்கெட் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி வருகின்றனர்.